மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: ஒரு நிமிடம் நான் பேசி விடுகிறேன். அடுத்து, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஞானசேகரன், இதுகுறித்து நீங்கள் அறையில் ஏற்கெனவே சொன்னீர்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இதற்கு விளக்கம் சொல்வார்கள். ஏன் மறுபடியும் இந்தப் பிரச்சினையைக் கிளப்ப வேண்டும்? உங்களுடைய கட்சி உறுப்பினர் பேசவிருக்கிறார். அவர் பேசுகிறபோதுகூட பேசட்டும். இது Point of order கிடையாது. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

முற்பகல் 10-15

(ஈ) உறுப்பினர்கள் சிலர் வாயில் கறுப்புத் துணியைக் கட்டிக்கொண்டு அமர்ந்தது

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையினுடைய கண்ணியத்தைக் காப்பது உங்களுடைய கடமையாகும். அதை நாங்கள் யாரும் தவறு என்று சொல்ல முடியாது. நீங்கள் காத்துத்தான் வருகின்றீர்கள். போன வாரம் இதே அவையில் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய அதிருப்தியையும், தன்னுடைய எண்ணத்தையும் வெளிப்படுத்துவதற்காகச் சட்டையில்லாமல் வந்தார். அப்போது நீங்கள் உடனடியாக விசாரித்து, உரிய நடவடிக்கை எடுத்தீர்கள். அவையிலே ஒருவர் எந்த முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. அது சட்டமன்றமானாலும் சரி, பாராளுமன்றமானாலும் சரி. அவர்கள் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டுவதற்காக நடைமுறையில் இல்லாத ஒரு முறையை வகுப்பது சபைக்கு சரிவராத ஒரு முறையாகும். ஆகவே, நீங்கள் அருள்கூர்ந்து இதுசம்பந்தமாக ஏதாவது ஒரு முடிவெடுத்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் செய்யும் இந்த நடவடிக்கைகள்மீது ஏதாவது முடிவெடுக்க வேண்டும். இல்லாவிட்டால், இப்படியே விட்டீர்கள் என்றால், ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். ஆகவே, இது சபையின் கண்ணியத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2001 செப்டம்பர் 5] [டாக்டர் மு. தம்பிதுரை]

இரண்டாவது, இவர் சொன்னதுபோல, ஏதோ தூர்தர்ஷனைக் கொண்டு வர வேண்டும். எல்லா டி.விக்களையும் கொண்டு வர வேண்டும் என்றால் எங்கேயும் அதுமாதிரி தருவதில்லை. ஏதாவது ஒரு டி.விக்குத்தான் கொடுப்பார்கள். பார்லியமென்ட்டில் தூர்தர்ஷன் செய்கிறார்கள். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அதே பார்லியமென்ட்டிலே நாங்கள் பேசியதுகூட எவ்வளவோ வராமல் இருந்திருக்கிறது. அதற்காக நாங்கள் இதுமாதிரி ஒரு கறுப்புச் சட்டை போட்டுக்கொண்டு, முகமூடி போட்டுக்கொண்டு, ஒரு கறுப்பு கொள்ளைக்காரன் மாதிரி நான் வந்து உட்கார்ந்திருக்க முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் எதிர்ப்பைச் சொன்னார்கள். அது சரி, அதற்கு ஒரு முறை இருக்கிறது. அதற்காக இப்படியெல்லாம் செயல்படுவோம் என்று சொன்னால், அடுத்தது இன்னொரு முறை நாங்கள் குல்லா போட்டுக்கொண்டு வர வேண்டும், நாங்கள் அப்படி ஏதாவது போட்டுக்கொண்டு வந்து உட்கார வேண்டும் என்பார்கள். இப்படியெல்லாம் வருவதற்கு அவையின் செயல்முறை இடம் தருகிறதா? (குறுக்கீடுகள்) அதன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேரவைத் தலைவருக்குத்தான் வேண்டுகோள் வைத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) உங்களுக்கு அல்ல. பேரவைத் தலைவருக்குத்தான் வேண்டுகோள் வைத்திருக்கிறார்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்ன சொன்னாலும் நாங்கள் அதற்குக் கட்டுப்படுகிறோம். மாண்புமிகு அமைச்சர் டெல்லியிலிருந்து வந்தவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, பர்கூரிலிருந்து வந்தவர்.

திரு. துரைமுருகன்: சென்ற முறை என்ன நடந்தது என்றால், திடீரென்று உள்ளே வந்து சுந்தரமும் மற்றவர்களும் பெரிய பேனரையே பிடித்துவிட்டார்கள். இங்கிருந்து அவ்வளவு தூரத்திற்குப் பேனரைப் பிடித்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) கறுப்புக் கொடி காட்டியிருக்கிறார்கள். அதெல்லாம் மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியாது. ஏனென்றால் அவர் அப்போது இங்கு இல்லை. ஆகவே அவர்கள் செய்ததில் பாதிதான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்....

[2001 செப்டம்பர் 5

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் என்ன சொன்னாலும் இந்த அவையில் எங்கள் இயக்கம் கட்டுப்படும். சபாநாயகருக்கு மரியாதை தருவது என்பது நாங்கள் எடுத்திருக்கிற முடிவு.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எனக்குத்தான் வேண்டுகோள் வைத்தார். (குறுக்கீடுகள்) உங்களுக்கல்ல. எனக்குத்தான் அந்த வேண்டுகோள் வைத்தார். கல்வி அமைச்சர் அவர்களுக்கு நான் குறிப்பிட விரும்புவது, மாண்புமிகு துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர், பரிதி இளம்வழுதி, பேரவைத் துணைத் தலைவராக இருந்தவர், அமைச்சர்களாக இருந்தவர்களெல்லாம் இருக்கிறார்கள். பிச்சாண்டி இருக்கிறார். நம்முடைய சாத்தூர் இராமச்சந்திரன்—நம்முடைய சாத்தூர் இராமச்சந்திரன்—அவரும் இருக்கிறார். ஆகவே, எல்லோரும் மூத்த உறுப்பினர்கள். அமைச்சர்களாக இருந்தவர்கள். அனுபவம் பெற்றவர்கள். அவையினுடைய கண்ணியத்தைக் காக்க வேண்டும் என்கின்ற உணர்வு அவர்களுக்கும் நிச்சயமாக இருக்க வேண்டும். அவர்கள் இதுதான் முறையென்று விரும்பினால், பொது மக்கள் அதைப் புரிந்துகொள்ளட்டும். அதற்கு மேல் நாம் என்ன செய்ய முடியும்?

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுந்தரம் பேனரைக் காட்டியதுகூட உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது என்று அறிகிறேன். (குறுக்கீடுகள்) அதுதான் அவர்கள் பேனரைக் காட்டிவிட்டு முடித்துவிட்டாரே, (குறுக்கீடுகள்) இப்போதும்கூட நீங்கள் கண்டனத்தைத் தெரிவித்து விட்டீர்கள். கட்டிக்கொண்டே இருக்க வேண்டியதில்லையே? (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது கோரிக்கைகளை உணர்ந்து, உங்கள் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறீர்கள். எனவே, இதை எடுத்துவிடலாம் என்று சொன்ன காரணத்தால், பேரவைத் தலைவருக்கு நாங்கள் மரியாதை தந்து, இப்போது நாங்கள் அதை எடுத்துவிடுகிறோம்.

2001 செப்டம்பர் 5]

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய வாயில் கட்டிக்கொண்டிருந்த கறுப்புத் துணியை எடுத்துவிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மிக்க நன்றி. கண்ணியத்தைக் காப்பதற்கான முறை, வழி, இதுதான். கண்டனத்தைத் தெரிவித்து விட்டீர்கள், முடித்துவிடுங்கள். பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள். இன்னொரு நாளைக்கு அது பயன்படும் என்று அதைப் பத்திரப்படுத்தாதீர்கள். (சிரிப்பு)

(ஆ) சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்-தொடர்ச்சி

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொன்னார்கள். பாராளுமன்றத்தைப் பொறுத்தவரைக்கும், பாராளுமன்றத்திலே மைய அரசினுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்ற தூர்தர்ஷன் மட்டும்தான் அங்கு வைக்கப்படுகிறது. தமிழகத்திலே தூர்தர்ஷனை தற்போது வைக்க முடியாது. ஏனென்றால் தமிழகத்திலே தற்போது நாம் Information Department மூலமாக அதை எடுத்துக்கொண்டிருக்கிறோம். பாராளுமன்றத்திற்கு ஒரு விதி, சட்டமன்றத்திற்கு ஒரு விதி என்று கடைபிடிப்பது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தூர்தர்ஷன் என்பதுகூட இப்போது தனி அமைப்பு. (குறுக்கீடு) திரு. துரைமுருகன், நான் ஒரு விளக்கம் சொல்லிவிடுகிறேன். தூர்தர்ஷன்கூட ஒரு தனி அமைப்பு. ஏற்கெனவே அவர்கள் இங்கே எடுத்த நேரத்தில் நான் அவையிலே இருந்து அவைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட்ட சில கருத்துகளை தூர்தர்ஷனிலே வெளியிட்டுவிட்டார்கள். நான் அதற்கு வருத்தம் தெரிவித்து தூர்தர்ஷனுக்குக்கூட கடிதம் எழுதியிருக்கிறேன். ஆகவே, அது ஒரு தனி அமைப்பு. ஆகவேதான் இந்தப் பிரச்சினைகள் வரக்கூடாது என்று திரைப்படத் துறை இதை எடுக்கிறது. இதற்கு நீங்கள் உங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறீர்கள், புலப்படுத்தியிருக்கிறீர்கள். அந்த அளவோடு பிரச்சினை முடிந்தது.